

தஞ்சாவூர் அன்னை சத்யா விளையாட்டு மைதானத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் நடத்தப்படும் 14வது சர்வதேச ஜூனியர் ஹாக்கி உலக கோப்பை அறிமுக நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் கலந்து கொண்டு தொடங்கி வைத்தனர். இதில் தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், தஞ்சை மேயர் சண்.ராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி மற்றும் அரசு அலுவலர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் உடனிருந்தனர்.



மயிலாடுதுறை தியாகி நாராயணசாமி நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்தும் 14வது ஜூனியர் ஆடவர் ஹாக்கி உலகக் கோப்பை போட்டி உலகக்கோப்பையானது மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மாவட்ட எஸ்.ஸ்ரீகாந்த், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோ.ஸ்டாலின் ஆகியோர் முன்னிலையில் காட்சிப்படுத்தப்பட்டது. உடன் மயிலாடுதுறைநகர கழக செயலாளரும், நகர்மன்ற தலைவருமான குண்டாமணி (எ) என்.செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.

### கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பெற்றோரை இழந்து தவிக்கும் நான்கு குழந்தைகளும் – இனி நம் அரசின் குழந்தைகள்!

# இந்த நான்கு குழந்தைகளின் எதிர்காலம் சிறக்க நமது ‘திராவிட மாடல்’ அரசு துணை நிற்கும்!

## வலைதளப் பதிவில் — முதல்வர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சி!

சென்னை, நவ.19 -

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பெற்றோரை இழந்து தவிக்கும் நான்கு குழந்தைகளுக்கு ஆறுதல் கூறியது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**இந்த நான்கு குழந்தைகளும் இனி நம் அரசின் குழந்தைகள்! அவர்களது எதிர்காலத்தை அரசு பாதுகாக்கும்!**

**இந்தச் செய்தியைக் காலையில் தினத்தந்தியில் படித்ததுமே, மாவட்ட ஆட்சியரை அழைத்து அவர்களது தேவைகளையும் கோரிக்கைகளையும் கேட்டறியச் சொன்னேன்.**

**நானும் தொலைபேசியில் அவர்களிடம் பேசி, அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்து துணை நிற்போம் என உறுதியளித்தேன். மாலை, அமைச்சர் எ.வ.வேலு அவர்களும் அவர்களை நேரில் சந்தித்து, அவர்களுக்குத் தேவையான உடனடி நிதியுதவியை வழங்கியுள்ளார்.**

**இந்த நான்கு குழந்தைகளின் எதிர்காலம் சிறக்க, அவர்கள் வாழ்வில் முன்னேறிட நமது திராவிட மாடல் அரசு துணை நிற்கும்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### முருகப்பா குழுமத்தின் முன்னாள் தலைவர் - கோரமண்டல் இன்டர்நேஷனலின் மதிப்புறு தலைவர்

# அருணாசலம் வெள்ளையன் மறைவு - தமிழ்நாட்டின் தொழில் துறைக்கு இழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் !

**சென்னை, நவ.19 –**

**முருகப்பா குழுமத்தின் முன்னாள் தலைவரும் – கோரமண்டல் இன்டர்நேஷனல்–இன் மதிப்புறு தலைவருமான அருணாசலம் வெள்ளையன் அவர்கள் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:–**



பாரம்பரியமிக்க முருகப்பா குழுமத்தின் முன்னாள் தலைவரும் – கோரமண்டல் இன்டர்நேஷனலின் மதிப்புறு தலைவருமான அருணாசலம் வெள்ளையன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

முருகப்பா குழுமத்தின் நிறுவனங்களிலும், தொழிற்கூட்டமைப்புகளிலும் பல்வேறு உயர் பொறுப்புகளில் சிறப்பாகப் பங்காற்றிய அவரது மறைவு தமிழ்நாட்டின் தொழில்துறைக்கு ஏற்பட்ட இழப்பாகும்.

அன்னாரை இழந்து தவிக்கும் துணைவியார் திருமதி. லலிதா அவர்களுக்கும் மற்றும் அவர்தம் குடும்பத்தாருக்கும், தொழில்துறையைச் சேர்ந்த நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### 72-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா!

# 2,593 பயனாளிகளுக்கு ரூ.20.08 கோடியில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்!

*சேலம், நவ. 19 - சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா.பிருந்தாதேவி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் , சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சமுதாயக் கூடத்தில் நேற்று முன் தினம் (17.11.2025) நடைபெற்றது. இவ்விழாவில், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனுக்கென பல்வேறு திட்டங்களை அறிவித்து அனைத்துத்துறைகளையும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் கூட்டுறவுத்துறையில் பல்வேறு சாதனைகளை புரிந்து உள்ளார்கள். அகில இந்திய அளவில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14 முதல் ஒரு வாரத்திற்கு கூட்டுறவு வார விழா நடத்தப்படுகிறது.*

*கடந்த 4 ½ ஆண்டுகளில் சேலம் மாவட்டத்திற்கு மட்டும் ரூ.5,052 கோடி மதிப்பிலான கடனுதவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சேலம் மாவட்டத்தில் ரூ.835 கோடி பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டு, கூட்டுறவு சங்கங்களில் நகைக்கடன் ரூ.483 கோடி தள்ளுபடி, மகளிர் சுய உதவிக்குழுக்களில் ரூ.132 கோடி கடன் தள்ளுபடியும் செய்யப்பட்டுள்ளது.*

*மேலும், சேலம் மாவட்டத்தில் உள்ள பொது விநியோகத்திட்டத்தில் 11,11,370 குடும்ப அட்டைதாரர்களுக்கு 21,642 மெட்ரிக் டன் அளவிலான அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று கடந்த 4 ½ ஆண்டுகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுச்சங்கங்களில் உள்ள 20 வகையான கடன்களின் வாயிலாக ரூ.21,856 கோடி அளவில் மொத்தமாக கடன் வழங்கப்பட்டுள்ளது.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உணவுப்பொருட்களை அவர்களின் இல்லத்திற்கே சென்று வழங்கும் திட்டத்தில் சேலம் மாவட்டத்தில் 1,10,375 குடும்ப அட்டைதாரர்கள் பயன் பெற்று வருகின்றனர். அதேபோன்று 32 முதல்வர் மருந்தகங்கள், கூட்டுறவு மருந்தகங்கள் ஏற்கனவே பல்வேறு கூட்டுறவு சங்கங்களினால் நடத்தப்பட்டு ஏறத்தாழ ரூ.25 கோடி அளவில் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது.*

*மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா காலத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4,000 நிவாரண உதவித்தொகையினை வழங்கினார்கள். பொதுமக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கியது வரை அனைத்து பணிகளையும் கூட்டுறவுத்துறை பணியாளர்கள் மேற்கொண்டு பொதுமக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களை கொண்டு சேர்க்கும் துறை இக்கூட்டுறவுத்துறையாகும். விவசாயிகள், சிறு வியாபாரிகள், பொதுமக்கள் என அனைத்துத்தரப்பினரும் பயனடையும் துறையாக கூட்டுறவுத் துறை விளங்குகிறது.*

*இக்கூட்டுறவு வார விழா நிகழ்ச்சியின் வாயிலாக பயிர்கடன், கால்நடை பராமரிப்புக்கடன், மத்தியக் காலக் கடன், மகளிர் சுய உதவிக்குழு கடன், மாற்றுத்திறனாளி கடன், வீட்டு வசதி கடன், மகளிர் சிறுவணிகக்கடன் மற்றும் வீடு அடமானக்கடன் என 2,593 பயனாளிகளுக்கு ரூ.20.08 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளும், ரூ.3.55 கோடி மதிப்பீட்டில் 6 வேளாண் சேவை கட்டிடங்கள், 3 அலுவலக கட்டடம், 4 அலுவலக கட்டிடங்கள் நவீனமயமாக்கல் பணி நிறைவுபெற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தும், மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு பாராட்டு கேடயங்களும் மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளது. நலத்திட்ட உதவிகள் மற்றும் சிறப்பாகப் பணியாற்றி விருதுகளைப் பெற்றுள்ள அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*இவ்வாறு மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்கள்.*

*இவ்விழாவில், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, சேகோசர்வ் மேலாண் இயக்குநர் திருமதி ஆர். கீர்த்தி பிரியதர்ஷினி, ஆவின் பொது மேலாளர் ப.குமரேசன், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கூடுதல் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் குழந்தைவேலு, சேலம் மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் க.ராஜ்குமார், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் பாரப்பட்டி சுரேஷ்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், கூட்டுறவு சங்க அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.*



தஞ்சாவூர் வடக்கு மாவட்டம், கும்பகோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குடந்தை மாநகர், மற்றும் ஒன்றிய பகுதிகளில் நடைபெற்று வரும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த முகாமை மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. ஆய்வு செய்தார். உடன் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், பகுதிச் செயலாளர் செல்வராஜ், டி.வி.கிருஷ்ணமூர்த்தி, கல்யாணசுந்தரம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் உள்ளனர்.



தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாற்றுத்திறனாளி கிருஷ்ணமூர்த்தி கோகுல்தாஸ்க்கு தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ. வின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு பயனாளிக்கு மூன்று சக்கர வாகனத்தை வழங்கினார்கள். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.முரசொலி எம்.பி., மேயர், துணை மேயர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து உடன் கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொன்னாப்பூர் கீழ்பாதி **பொ.செகதீசன்**

### நவம்பர் 19 (1980)



பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின்மீது கொண்ட தீவிரப் பற்றினால், கழகம் தொடங்கிய காலத்திலிருந்து தீவிரமாக கழகப் பணியாற்றியவர்.

திராவிடநாடு, முரசொலி, நம்நாடு, மாலைமணி ஆகிய கழக இதழ்களை வாங்கி, அதனை பொதுமக்களுக்கும், தோழர்களுக்கு வழங்கி கழக கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்த்தவர்.

ஒரத்தநாடு, பொன்னாப்பூர் கீழ்பாதி கிளைக் கழகச் செயலாளராகவும், அவைத் தலைவராகவும், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.

1952 முதல் 1978 வரை தொடர்ந்து ஊராட்சி மன்றத் தலைவர் பதவி வகித்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆரணி **ஏ.செல்வரசு**

### நவம்பர் 19 (2015)



பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின்மீது கொண்ட தீவிரப் பற்றினால், கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, மிதிவண்டியில் கிராமந்தோறும் சென்று, கொள்கைகளை பரப்பி கழகத்தை வளர்த்தவர்.

ஆரணி நகரச் செயலாளராக தொடங்கி, ஒருங்கிணைந்த வடாற்காடு மாவட்டக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் முதன்மைத் தொண்டராக திகழ்ந்தவர்

கழகம் அறிவித்த போராட்டங்கள் அனைத்தையும் முன்னெடுத்து சென்று நடத்தியதோடு, தாமும் அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**